ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1473/ 17 – 2006 නොවැම්බර් 30 වැනි බ්‍රහස්පතින්දා – 2006.11.30

1473/ 17 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி III – காணிகள்

காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ளஅரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

சுனாமி அனர்த்தத்தினால் நிர்க்கதியானவர்களுக்காக வீடுகள் அமைப்பதற்கு காணி சுவீகரித்தல்

தென் மாகாணம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில், தங்காலை பிரதேச செயலாளர் பிரிவில், மேற்கு கிரவாபத்துவ சிறு பிரிவில் பொல் மொட்டே கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் இ. கி. வ. 320 உம் 2006.10.23 ஆந் திகதியும் கொண்ட முதல் வரை படத்தில் துண்டு இல. 47 என குறிக்கப்பட்டுள்ள முழு விஸ்தீரணத்தில் 31.0287 ஹெக்டயார்ஸ் அளவான மோதரமுனேயாய என்னும் காணிக்கு எல்லைகள் :

வடக்கு : 01 ஆன நிலத்துண்டு ; கிழக்கு : 23 உம் 26 உம் ஆன நிலத்துண்டு ; தெற்கு : 23 உம் 26 உம் ஆன நிலத்துண்டு ; மேற்கு : இ. கி. வ. 315 உம் இ. கி. வ. 319 உம்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2006.12.20 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு தங்காலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2006.12.13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். கே. டீ. அபேவர்தன,
பிரதேச செயலாளர்,
தங்காலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தங்காலை,
2006.11.27.

12 – 555

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.